**CRL.M.P.No.**62/2025 தேதி - 24.10.2025

**LW** 3 - **அன்பு, த/பெ.நடேசன்**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.**

1) நான் புகளூர் ஹைஸ்கூல் மேட்டில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் எனது ஊரைச்சார்ந்தவர். அவர் New india assurance company–ல் வேலை செய்து வருகிறார். அவர் வேலை நேரம்போக மீத நேரங்களில் ஏழை மாணவ, மாணவியருக்கு இலவசமாக தடகள பயிற்சி நடத்தி வருகிறார். அவர் மூலமாக அவர்கள் கல்லூரியில் இடம் கிடைத்தும், காவல் பணிக்கு வேலை கிடைத்தும் உள்ளார்கள். சில காவல் துறை அதிகாரியிடம் நல்ல பெயர் பெற்றுள்ளார். காது கேட்காத மற்றும் ஊமை அரசு பள்ளி மாணவன் கார்த்திக்கு பறிச்சியளித்து அவர் துருக்கி பாரா ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு ஐந்தாம் இடம் பெற்றார். அவர் தற்போது அஞ்சல் துறையில் பணிபுரிந்து வருகிறார். உள்ளூரில் பகவதியம்மன் ஸ்ரீ மகாகணபதி ஆலயம் நிர்வாகம் செய்வது தொடர்பாக முறையிட்டாளருக்கும் மூர்த்தி, சண்முகம், பாண்டித்துரை, சிவானந்தம், மகேஸ்வரன், பாண்டியன், ரூபன், பாலு, சதீஸ்குமார், அன்பு, சீனிவாசன், கலைவானன், பிரேம் ஆகியோர்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்து வருகிறது. மேற்படி நபர்கள் முறையீட்டாளர்கள் மீது வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்திலும், மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், அவர் பணிபுரியும் இடத்தில் பொய்யான புகார் கொடுத்து, முறையீட்டாளர் கோவில் பணத்தை

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

கையாடல் செய்து விட்டார் என்று பொய்யாக விபத்து ஏற்பட்டதாக கூறி பணம் பெற்றுக்கொண்டார் என்றும், அலுவலகத்திற்கு அவர் தாமதமாக செல்கிறார் என்றும், அடியாட்களை வைத்து கட்டப்பஞ்சாயத்து செய்கிறார் என்றும் கூறியுள்ளனர்.

2) மேற்படி நபர்கள் எங்களை உள்ளடக்கிய கமிட்டியிடம் கேட்காமல் கோவில் கருவறையை இடித்துவிட்டார்கள் நாங்கள் அழுத்தம் கொடுத்த நிலையில் பொது மக்களிடம் நன்கொடை வசூலித்து கோவிலை கட்டினார்கள் அதற்கு உரிய கணக்கு அவர்கள் கொடுக்கவில்லை. ஊர் பொது மக்கள் மேற்படி நபர்கள் முறையீட்டாளருக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளார்கள் என்று கூறினார்கள். அதை கேட்ட எனக்கும் மற்ற கோவில் கமிட்டியினருக்கும் பெருத்த மன உளைச்சல் ஏற்பட்டது. முறையீட்டாளருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் மிகுந்த மன உளைச்சலும், வேதனையும் ஏற்பட்டது. அவர் பணிபுரியும் இடத்திலும் நாங்கள் வாழும் பகுதியிலும் மிகுந்த அவமானம் ஏற்பட்டு அவரால் வெளியில் தலை காட்ட முடியவில்லை. மேற்படி நபர்கள் முறையீட்டாளருக்கு எதிராக ஏற்படுத்திய அவதூறு செயல்களுக்காக அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். நான் மேலே குறிப்பிட்டுள்ள நபர்களில் சிலர் மீது கஞ்சா விற்பனை, சாராய விற்பனை செய்வதாகவும், திருட்டு அடிதடி குற்றங்களும் செய்ததாக வழக்குகள் உள்ளது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/−எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.